Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 417/**2022**
**Depostitions of PW- 15 Witness for**

| | |
|---|---|
| Name | இளவரசன், காவல் துணை கண்காணிப்பாளர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of October 2023

Signature of Witness.

05.10.2023

1 ம் எதிரி இறந்துவிட்டார் 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை—**

நான் தற்போது மதுரை மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவல் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கிருஷ்ணன்கோவில் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது 10.08.2013 அன்று மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு. துறைராஜ் அவர்கள் மல்லி காவல் நிலைய குற்ற எண். 181/2013 பிரிவுகள் 3 தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் மற்றும் இழப்பு தடுப்பு சட்டம், 506(2) இதச வின் படி வழக்கு பதிவு செய்து முதல் விசாரணை செய்துள்ளார். பின்பு சார்பு ஆய்வாளர் திருமதி. மகேஷ்வரி

விசாரணை செய்த வழக்கு கோப்பை 17.03.2015 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவஇடம் சென்று பார்வையிட்டு சாட்சிகளை விசாரித்ததில் சார்பு ஆய்வாளர் துரைராஜ் அவர்களிடம் கூறியதுபோல் என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வழக்கு கோப்பை பார்வையிட்டதில் விசாரணை முடிந்தபடியால் எனது விசாரணையை முடித்து குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

அ.சா.1 புகார் மனுவில் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு நிலுவையில் இருப்பதாக சொல்லித்தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனு உத்தரவின் மீது விசாரணை செய்தேனா என்றால் மனு நிலுவையில் இருப்பதாக அவரே கூறியுள்ளதினால் மேலும் அதுபற்றி விசாரிக்கவில்லை. புகார்தாரர் சுப்பிரமணியன் என்பவர் மீது எதிரி சின்னமுனியாண்டியின் மனைவி சி. பெரியம்மாள், விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த உரிமையியல் வழக்கு குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. அ.சா.1 சம்பவத்தின்போது சம்மந்தப்பட்ட வீட்டில் குடியிருக்காமல் வேறு வீட்டில் குடியிருந்தார் என்றால் சரிதான். ஆனால் அவரது பொருள்கள் சம்மந்தப்பட்ட வீட்டில் இருந்தது. 2008 ம் ஆண்டில் விருதுநகர் மாவட்டட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 313/2007 தீர்ப்பின் படி அ.சா.1 சம்மந்தப்பட்ட சொத்தின் அனுபவத்தை எதிரி சின்ன முனியாண்டியிடம் ஒப்படைத்து விட்டு சென்று விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவும், ரிட் மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவும் எனது பார்வைக்கு வந்ததா என்றால் இல்லை. அந்த உத்தரவுகள் எனது பார்வைக்கு வந்திருந்தால் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்திருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. உத்தரவுகளை பார்த்துதான் முடிவு செய்ய இயலும். நான் ஆவணங்களை பார்வையிடாமலும், நீதிமன்ற உத்தரவிணை பார்வையிடாமலும் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.